## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்

**முன்னிலை: திரு.ர.வாஞ்சிநாதன்,B.A.,B.L., (Hons),**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**வேடசந்தூர்.**

**திருவள்ளுவராண்டு 2054 சோபகிருது வருடம் ஆணி மாதம் 11 ம் நாள்**
**2023 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ம் நாள் திங்கட்கிழமை**

**அசல் வழக்கு எண்.16/2022**
(CNR.No.TNDG160000142022)

சின்னக்காளை தேவர் ... வாதி

/எதிர்/

ராசாத்தி ... பிரதிவாதி

இந்த வழக்கானது 25.01.2022 தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 17.08.2023 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.J.இராஜரத்தினம் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.முருகேஷ் அவர்கள் முன்னிலையாகியும், வாதிகள் தரப்பு சாட்சிகளை குறுக்குவிசாரணை செய்ய முன்வராத காரணத்தினால் பிரதிவாதி ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதி தரப்பு கேட்கப்பட்டும், வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

கூடுதலாகும் தொகை ரூ.64,167/-, அசல் தொகை ரூ.50,000/க்கு வழக்கு தொடுத்த தேதி முதல் மாதம் 1க்கு 100/-க்கு

ரூபாய் 1.00 வட்டி வீதம் தொகை செலுத்தும் வரை வட்டியும், வழக்கின் செலவுத் தொகையும் சேர்த்து வாதிக்கு, பிரதிவாதி செலுத்தி வைக்கக்கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. <u>வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:–</u>

(i) தாவா பிராமிசரி நோட்டில் கண்ட விபரப்படி வாதியிடம் பிரதிவாதி அவசர நிமித்தமாக குடும்பச் செலவிற்காகவும், சில்லரை கடன்களை தீர்ப்பதற்காகவும் கடனாக ரொக்கம் ரூ.50,000/– கடந்த 08.09.2019 ம் தேதியில் பெற்றுக் கொண்டு, மேற்படி தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு ரூ.1/– வீதம் வட்டி சேர்த்து கூடிய வட்டியும், அசலையும் வாதி வேண்டும் போது மேற்படியாரிடமாவது அல்லது மேற்படியாரின் உத்தரவு பெற்றவர்களிடமாவது ரொக்கம் செலுத்தி பிராமிசரி நோட்டை திரும்ப பெற்றுக் கொள்வதாக ஒப்புக்கொண்டு, வாதிக்கு பிரதிவாதி தாவா பிராமிசரி நோட்டை வாதியின் வீட்டில் வைத்து 08.09.2019 ம் தேதியில் எழுதிக்கொடுத்துள்ளார்.

(ii) மேற்படி வழக்கு புரோநோட்டிற்காக வாதிக்கு, பிரதிவாதி இது வரை யாதொரு தொகையும் செலுத்தவில்லை. பிராமிசரி நோட்டின் அசலையும் அதற்குரிய வட்டியையும் சேர்த்து செலுத்தி வைக்கும் படி வாதி பிரதிவாதியை பலமுறை நேரிலும், ஆட்கள் மூலமாகவும் துயர்ந்தும் பிரதிவாதி மேற்படி கடன் தொகை வகையறாவை திருப்பி செலுத்துவதாகவே கூறி திருப்பி செலுத்தாமல் வீண் காலம் கடத்தி வந்ததால், வாதி அவரது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு 07.01.2021 ம் தேதியில் அறிவிப்பு அனுப்பியதில் மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொண்ட பின்பு இது நாள் வரை

பிரதிவாதி மேற்படி புரோநோட்டுக்குண்டான யாதொரு தொகையும் செலுத்தாமல் வீண் காலம் கடத்தி வருகிறார். எனவே வழக்கு புரோநோட்டு தொகை வகையறாவை பிரதிவாதியிடமிருந்து வசூல் செய்ய வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:-</u>

(i) பிரதிவாதி, வாதியிடம் கடந்த 08.09.2019 ம் தேதி ரூ.50,000/- கடனாக பெற்றுக் கொண்டு அதற்கு ஆதரவாக தாவா பிராமிசரி நோட்டை எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி தொகை ரூ.50,000/-க்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100 க்கு ரூ.1/- வீதம் வட்டி சேர்த்து கூடிய வட்டியையும், அசலையும் வாதி வேண்டும்போது செலுத்திவிடுவதாக பிரதிவாதி ஒப்புக்கொண்டதாகவும், வாதி மேற்படி கடன் தொகையை திருப்பி செலுத்தும்படி பிரதிவாதியை பலமுறை துயர்ந்து கேட்டதாகவும், பிரதிவாதி பிரித்து தருவதாகவே கூறி வீண் காலம் கடத்தி வருவதாகவும் பிராதில் கூறியிருப்பதை உண்மையல்ல. பிரதிவாதி, வாதியிடம் எப்போதும் எவ்வித தொகையும் கடனாக பெற்றுக்கொள்ளவில்லை. வாதிக்கு, பிரதிவாதி எப்போதும் புரோநோட்டு எதுவும் எழுதி தரவில்லை. பிரதிவாதியிடம், வாதி தொகையை திருப்பி செலுத்தும்படி கேட்கவுமில்லை. பிரதிவாதி எப்போதும் தொகையை திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொள்ளவுமில்லை.

(ii) பிரதிவாதி கணவனை இழந்த பெண்ணாக இருப்பதாலும், பிரதிவாதி தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கணக்கெடுப்பாளராக பணி

செய்து வருவதாலும், பிரதிவாதியை மிரட்டி தொகை பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வட்டி தொழில் செய்து வரும் வாதி பிரதிவாதியின் கையெழுத்தை மோசடியாக போட்டு தாவா புரோநோட்டை உற்பத்தி செய்து கொண்டு 07.01.2021ம் தேதி பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அதை பெற்றுக் கொண்ட பிரதிவாதி அது பற்றி வாதியிடம் கேட்டதில், தவறுதலாக பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு விட்டதாகவும், அதன்பேரில் எவ்வித நடவடிக்கையும் எடுக்க போவது இல்லை என்றும் கூறியுள்ளார். பிரதிவாதி அதை நம்பி எவ்வித பதிலறிவிப்பும் அனுப்பாமல் இருந்து விட்டார். ஆனால் வாதி அதன் பிறகு பிரதிவாதியிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யான சங்கதிகளை கூறி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி, வாதிக்கு எவ்வித தொகையும் செலுத்த கடமைப்பட்டவரல்ல. வாதியின் பிராது பொய்யானதாகும். எனவே வாதியின் வழக்கை பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இவ்வழக்கில் 16.11.2022ம் தேதி கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. Whether the suit promisary note dated 08.09.2019 was executed by defendant in favour of plaintiff?
2. Whether the plaintiff is entitled to recovery the suit claim amount along with subsequent interest?

3 To what other relief plaintiffs are entitled to?

**5.** வாதி தரப்பில் வாதி சின்னக்காளை தேவர் வா.சா.1 ஆகவும், சவுக்கத்தலி என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. <u>1 மற்றும் 2 எழுவினாக்களுக்கான தீர்வு</u>

இரு தரப்பும் கேட்கப்பட்டது வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வாதியிடமிருந்து பிரதிவாதி 08.09.2019ம் தேதி ரூ.50,000/- கடன் பெற்றுக்கொண்டதற்கு ஆதரவாக வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டு எழுதிக் கொடுத்துவிட்டு மேற்படி கடனை பிரதிவாதி வாதிக்கு திரும்ப செலுத்தவில்லை என்பதால் மேற்படி கடன் தொகையை திரும்பக் கேட்டு வாதி, பிரதிவாதிக்கு 07.01.2021ம் தேதி வா.சா.ஆ.2 சான்றாவணமான வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பை வா.சா.ஆ.3ன் மூலம் பிரதிவாதி பெற்றுக்கொண்டும் எந்த பதிலும் தெரிவிக்காமலும், கடன் தொகையை பிரதிவாதி, வாதிக்கு திருப்பி செலுத்தப்படவில்லை என வாதி வழக்குரை சங்கதிகளுக்கு ஆதரவாக தனது முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார்.

**7.** வாதியின் வழக்குரை சங்கதிகளை மறுத்து பிரதிவாதி, வாதியிடம் எப்போதும் எவ்வித தொகையும் கடனாக பெற்றுக்கொண்டு புரோநோட்டு எதுவும் எழுதி தரவில்லை என்றும், பிரதிவாதியிடம், வாதி தொகையை திருப்பி செலுத்தும்படி கேட்கவில்லை என்றும், பிரதிவாதி

எப்போதும் தொகையை திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொள்ளவுமில்லை என்றும், பிரதிவாதி தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கணக்கெடுப்பாளராக பணி செய்து வருவதால் பிரதிவாதியை மிரட்டி தொகை பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வாதி பிரதிவாதியின் கையெழுத்தை மோசடியாக போட்டு தாவா புரோநோட்டை உற்பத்தி செய்து கொண்டு 07.01.2021ம் தேதி பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதை பெற்றுக் கொண்ட பிரதிவாதி அது பற்றி வாதியிடம் கேட்டதில், தவறுதலாக பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு விட்டதாகவும், அதன்பேரில் எவ்வித நடவடிக்கையும் எடுக்க போவது இல்லை என்றும் கூறியதால் பிரதிவாதி பதிலறிவிப்பும் அனுப்பவில்லை என்றும் எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ளபோதும் அதை நிரூபணம் செய்ய பிரதிவாதி தரப்பில் எந்த சாட்சிய, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

8. இந்நிலையில் வாதியிடமிருந்து பிரதிவாதி ரூ.50,000/- கடன் பெற்றுக் கொண்டு அதற்காக வா.சா.ஆ.1 சான்றாவணத்தை பிரதிவாதி எழுதிக் கொடுத்துள்ளாரா? என்பது குறித்து கண்டறிய வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டை பரிசீலனை செய்து பார்க்கும்போது, பிரதிவாதி கடனாக வாதியிடம் ரூ.50,000/- மாதம் ஒன்றுக்கு நூற்றுக்கு 1.00 வீதம் வட்டி செலுத்துவதாக சாட்சிகள் P.சவுக்கத்தலி முன்னிலையில் பெற்றுக்கொண்டு வேண்டும்போது செலுத்துவதாக கையொப்பம் செய்து எழுதிக்கொடுத்துள்ளது தெரியவருகிறது. மேற்படி சாட்சியான சவுக்கத்தலி வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, வாதி

தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளது தெரியவருகிறது.

**9.** மேலும், மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 118 ன் படி ஒரு மாற்றுமுறை ஆவணத்தில் உள்ள தொகையோ அல்லது கையெழுத்தோ மறுக்கப்படும்பட்சத்தில், அதை நிரூபிக்க தவறிவிட்டால், அந்த மாற்றுமுறை ஆவணம் அந்த குறிப்பிட்ட தேதியில், குறிப்பிட்ட தொகைக்காக, குறிப்பிட்ட நபர்களால் எழுதப்பட்டது என்று அனுமானம் செய்து கொள்ளலாம் என்பதன் அடிப்படையில், பிரதிவாதி கடனுறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை பெறவில்லை என்பதை நிரூபணம் செய்யாத நிலையில், தாவா கடனுறுதிச்சீட்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்காக பிரதிவாதியால் வாதிக்கு முறையாக எழுதிக்கொடுக்கப்பட்டது என்றே இந்நீதிமன்றம் வாதிக்கு சாதகமாக அனுமானம் செய்கிறது.

**10.** மேற்கண்ட சூழ்நிலையில், வழக்கின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை கவனமுடன் ஆராய்ந்ததன் அடிப்படையில், பிரதிவாதி வாதியிடமிருந்து ரூ.50,000/– கடன் பெற்றுக்கொண்டு, அதை திருப்பி செலுத்தாமலும் இருந்துள்ளார் என்பதும், வாதி தரப்பில் தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதி, வாதிக்கு தாவா தொகை கிடைக்கத்தக்கது என்று 1 மற்றும் 2 எழுவினாக்களுக்கு வாதிக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**11.** <u>**3 வது எழுவினாக்கான தீர்வு**</u>

வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று முடிவு

செய்யப்பட்டுள்ளதால் இதர பரிகாரங்கள் வழங்கப்படவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று எழுவினா 3 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**12.** உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908 பிரிவு 34–ன் படி வாதி கோரிய வழக்கு தொகைக்கான வட்டி விகிதமாக, அசல் தொகைக்கு தீர்ப்பு தேதியிலிருந்து தொகை முழுவதும் செலுத்தப்படும் வரை ஆண்டிற்கு 6% வட்டியும் வாதி பெறத்தக்கவர் என்றும், வழக்குச் செலவுத் தொகையையும் வாதி பெறத்தக்கவர் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**13. முடிவாக,** தாவா கூடுதலாகும் தொகை ரூ.64,167/–ஐ பிரதிவாதி, வாதிக்கு செலுத்தவேண்டும் என்றும், அசல் தொகை ரூ.50,000/–க்கு தீர்ப்பு தேதியிலிருந்து பணம் வசூலாகும் தேதி வரை ஆண்டுக்கு 6% வட்டியும், வழக்கின் செலவுத்தொகையும், பிரதிவாதி வாதிக்கு செலுத்த வேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Digitally signed by R VANJI NATHAN

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வேடசந்தூர்.**

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>:**

வா.சா.1 – சின்னக்காளை தேவர்

வா.சா.2 – சவுக்கத்தலி

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| **வ. எண்** | **தேதி** | **ஆவண விபரம்** | **குறிப்பு** |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 08.09.2019 | வாதிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த புரோநோட்டு | அசல் |
| வா.சா.ஆ.2 | 07.01.2021 | பிரதிவாதிக்கு வாதியின் வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | --- | வழக்கறிஞரை அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை | அசல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள்</u>** – இல்லை

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>** – இல்லை

Digitally signed by R VANJI NATHAN

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வேடசந்தூர்.**